தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 4-4-2017

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சிறந்த உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் வேளாண் பல்கலை

மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய நிறுவன தரவரிசை கூட்டமைப்பு (National Institute for Ranking Frame Work) ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்களுக்காக வெளியிடுகிறது.

இந்த கல்வியாண்டிற்கான (2017) தரவரிசைப் பட்டியலை நேற்று (3-4-2017) மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் அவர்கள் வெளியிட்டார்.

இதில் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய பல்கலைக்கழகங்களில் 17வது இடத்தைப் பிடித்துள்ளது. வேளாண்மை பல்கலை மத்தியில் தமிழ்நாடு வேளாண் பல்கலை, டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அடுத்து இரண்டாம் இடத்தைப் பிடித்து சாதனை புரிந்துள்ளது.

இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த உயர்கல்வி நிறுவனங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 28வது இடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பட்டியலிடப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் 5வது இடத்தில் உள்ளது.

இந்த தரவரிசைப் பட்டியலானது பல்கலையில் உள்ள கற்பித்தல் - கற்றல், ஆய்வு மற்றும் தொழில் முனைவு, கற்று வெளி செல்லும் மாணவர்களின் நிலை, தகவல் பரவலாக்கம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி, ஆசிரியர், மாணவர் மற்றும் பொது மக்கள் மத்தியில் நிறுவனங்களின் மேல் உள்ள மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு இந்த பட்டியல் தயார் செய்யப்படுகிறது.

மக்கள் தொடர்பு அலுவலர்